1992 ஏப்ரல் 28] திரு. ஆர்: சிங்காரம்

நாங்கள் இந்த சட்டமன்றத்திலே சிறப்புற பணி செய்வதற்கு, தாங்கள் எல்லா நேரத்திலேயும், எல்லா விஷயங்களிலும் சம அந்தஸ்து, வாய்ப்புக் கொடுத்து, எதிர்க்கட்சி, எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் நல்ல வாய்ப்புகளைக் கொடுத்து, சமமான அந்தஸ்தைக் கொடுத்து எங்களை ஊக்குவித்ததற்காக, எங்கள் அனைவரின் சார்பாக நன்றிகலந்த வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன.

பேரவை, மீண்டும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் படுகிறது. அனைவருக்கும் வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 4-48 மணிக்கு, மீண்டும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

75. மந்தார இலை விற்கப்படும் எந்த ஒரு விற்பனையாளரும் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3—1—1992-ஆம் நாளிட்ட 2-ஆம் எண், அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

76. 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எளிதான இயக்கூர்திகளை விற்கப்படும் எந்த ஒரு விற்பனையாளருக்கும் 15 சதவீத வரியிலிருந்து 8 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 1—11—1991-ஆம் நாளிட்ட 451-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

77. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1989-1990ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

78. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

79. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1990–91-ஆம் ஆணடிற்கான முப்பத்தி நான்காவது . ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

80. வேலூர் நகரில் 6—5—1991-ஆம் நாளன்று தளபதி அழகிரி போக்குவரத்துக் கழக (தற்போது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்றழைக்கப்படும்) தொழிலாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் காரணங்கள், காவல் துறையினர் தடியடிப் பிரயோகமும் துப்பாக்கிச் சூடும் நடத்த ஏதுவாக அமைந்த சூழ்நிலைகள் ஆகியவை குறித்து விசாரணை செய்ய அமைக்கப்பட்ட நீதிபதி திரு. ஜி. இராமானுஜம் அவர்களின் அறிக்கை. (1952-ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

81. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

1992 ஏப்ரல் 28]

82. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

83. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1992–93-ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1991–92-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள். [1948-ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

185. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 975 வரை.)

186. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை)

187. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை)

188. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை)

189. சட்டப் பேரவை விதி 55-ன் கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண். 1 முதல் 8 வரை).

190. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தாறு முதல். எழுபத்தி நான்காவது வரையிலான அறிக்கைகள் 1991–92.

191. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது முதல் என்பது வரையிலான அறிக்கைகள், 1991–92.